தினமணி

# முல்லைப் பெரியாறு: தில்லி பேச்சில் பங்கேற்பில்லை? தமிழகம் முடிவு

First Published : 09 Dec 2011 01:17:16 AM IST




சென்னை, டிச. 8: முல்லைப் பெரியாறு அணைப் பிரச்னை குறித்து மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ள பேச்சில் பங்கேற்கப் போவதில்லை என தமிழக அரசு முடிவெடுத்துள்ளதாகத் தெரிகிறது.

முன்னதாக, இரு மாநில அரசு அதிகாரிகள் நிலையிலான பேச்சுக்கு மத்திய நீர்வளத் துறை அமைச்சகம் ஏற்பாடு செய்திருந்தது. இந்தக் கூட்டத்தில் தமிழக அரசு பங்கேற்கப் போவதில்லை என அறிவித்தது.

அதிகாரிகள் நிலையிலான பேச்சில் பங்கேற்கப் போவதில்லை என்ற தமிழக அரசின் முடிவைத் தொடர்ந்து, இரு மாநில அரசுகளும் பேச்சு நடத்திப் பிரச்னையைத் தீர்க்க மத்திய அரசு அழைத்தது.

இதுதொடர்பாக, மத்திய நீர்வளத் துறை அமைச்சகம் இரு மாநில பொதுப்பணித் துறை செயலாளர்களுக்கும் கடிதம் அனுப்பியுள்ளது.

அதில் தில்லியில் டிசம்பர் 15 அல்லது 16-ம் தேதி பேச்சுக்கான சந்திப்பை நடத்தலாம். இந்த இரு தேதிகளில் உங்களுக்கு ஏற்ற ஒரு தேதியைத் தேர்வு செய்யலாம் என்று தமிழக, கேரள மாநில அதிகாரிகளுக்குக் கூறப்பட்டி

ருந்தது.

கூட்டத்தில் பங்கேற்பில்லை? முல்லைப் பெரியாறு அணையின் பலம் குறித்து ஆய்வு செய்ய உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் தலைமையில் 5 பேர் அடங்கிய, ""அதிகாரம் அளிக்கப்பட்ட குழு" அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் கூட்டம் கடந்த 5-ம் தேதி நடந்தது. அதில், நில நடுக்கத்தால் அணைக்கு பாதிப்பு எனக் கூறி கேரள அரசு தாக்கல் செய்துள்ள மனுவுக்கு தமிழக அரசு 10 நாள்களில் பதிலளிக்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழக அரசு தனது பதிலை டிசம்பர் 15 அல்லது 16-ம் தேதிக்குள் அளிக்கும். உச்ச நீதிமன்றம் அமைத்துள்ள குழுவுக்கு தமிழக அரசு பதிலளிக்கும் நிலையில், அதே காலகட்டத்தில் மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ள பேச்சில் பங்கேற்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

"முல்லைப் பெரியாறு அணை பலமாக உள்ளது; அதில் 142 அடி வரை நீரைத் தேக்கலாம்' எனத் தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்தச் சூழ்நிலையில், அணை தொடர்பாக கேரள அரசு தெரிவித்துவரும் தேவையற்ற அச்சங்களுக்கு, மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ள பேச்சில் பங்கேற்றுதான் பதில் தெரிவிக்க வேண்டும் என்கிற அவசியமில்லை என்ற கருத்து எழுந்துள்ளது.

இதன் அடிப்படையில் மத்திய அரசு நடத்தவிரும்பும் பேச்சில் தமிழக அரசு பங்கேற்காது எனத் தெரிகிறது.

## 16-ல் திருப்பத்தூரில் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

First Published : 08 Dec 2011 01:55:22 PM IST

வேலூர், டிச. 7: திருப்பத்தூரில் இம்மாதம் 16-ம் தேதி விவசாயிகள் குறைதீர்ப்புக் கூட்டம் நடைபெறுகிறது.

விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்க ஒவ்வொரு மாதமும் வெள்ளிக்கிழமை நடைபெறும் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் டிசம்பர் 16-ம் தேதி காலை 10.30 மணிக்கு திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிய கூட்ட அரங்கில் நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜன் தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில் அனைத்து துறை அதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

இதில் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்று தங்கள் கோரிக்கைகளை, ஆலோசனைகளைத் தெரிவிக்கலாம். விவசாயிகள் தங்கள் கோரிக்கை தொடர்பான மனுக்களை ஆட்சியரிடம் நேரில் அளிக்கலாம்.

கோரிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் பதில் அளிப்பார்கள். எனவே, விவசாயிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்று பயன்பெறலாம் என ஆட்சியர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தினமலர்

உண்மையின் உரைகல்

**நாட்டின் உணவு பணவீக்கம் 6.60% ஆக குறைவு**

டிசம்பர் 08,2011,12:03



புதுடில்லி : கடந்த வாரத்திற்கான நாட்டின் உணவு பணவீக்கம் கடுமையாக சரிவடைந்துள்ளது. நவம்பர் 26ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 6.60 சதவதமாக குறைந்துள்ளது. முந்தைய வாரத்தில் உணவு பணவீக்கம் 8 சதவீதமாக இருந்தது குறிபிடத்தக்கது. காய்கறிகள், வெங்காயம், உருளைக்கிழங்கு, கோதுமை உள்ளிட்ட உணவு பொருட்களின் விலை குறைந்ததன் காரணமாக பணவீக்கம் குறைந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வெங்காய விலை 39.20 சதவீதமும், உருளைக்கிழங்கு 15.75 சதவீதமும், கோதுமை விலை 4.70 சதவீதமும் குறைந்துள்ளன. அதேசமயம் பருப்புக்களின் விலை 13 சதவீதமும், பால் விலை 11.02 சதவீதமும், முட்டை, இறைச்சி மற்றும் மீன்களின் விலை 10.04 சதவீதமும் அதிகரித்துள்ளது. இதே போன்று பழங்களின் விலை 10.72 சதவீதமும், தானியங்களின் விலை 1.68 சதவீதமும் உயர்ந்துள்ளது.

**உர நிறுவனங்களுக்கு ரூ.1 லட்சம் கோடியில் நிதியம் தேவை:அயல் நாடுகளில் கனிம சுரங்கங்கள் வாங்க...**

டிசம்பர் 08,2011,00:21



புதுடில்லி:அயல் நாடுகளில் கனிம நிறுவனங்களை கையகப்படுத்த,1 லட்சம் கோடி ரூபாயில் தேசிய முதலீட்டு நிதியம் (எஸ்.எப்) ஒன்றை ஏற்படுத்தினால் ரசாயன உரங்களின் விலை கட்டுக்குள் வரும் என்று, மத்திய அரசிடம் இந்திய உர உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு யோசனை தெரிவித் துள்ளது.

இந்த கூட்டமைப்பு சார்பில், டெல்லியில் "உர சீர்திருத்தங்கள் - சவால்களும், வாய்ப்புகளும்'என்ற தலைப்பில் மூன்று நாள் கருத்தரங்கம் நேற்று தொடங்கியது. இதில் இந்த கூட்டமைப்பின் தலைவர் மற்றும் முருகப்பா குழுமத்தின் தலைவர் ஏ.வெள்ளையன் கலந்து கொண்டு பேசினார்.பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது:

உரத்துறைக்கு தேவையான பொட்டாஷ் மற்றும் பாஸ்பேட் ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ள நிலையில், அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாயின் வெளி மதிப்பு சரிவடைந்துள்ளதால், இறக்குமதி செலவினம் அதிகரித்துள்ளது. இதனால், உள்நாட்டு உர தயாரிப்பு நிறுவனங்கள் கடுமையாக பாதிப்படைந்துள்ளன.

உர விலை:மூலப்பொருட்களின் விலை உயர்வை கட்டுக்குள் கொண்டு வந்தால், உள்நாட்டில் உரங்களின் விலையும் குறையத் தொடங்கும்.எனவே,மத்தியஅரசு,இதுகுறித்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.மத்திய அரசு, பொதுத்துறை நிறுவனங்களின் வர்த்தக மேம்பாட்டிற்காக, 5,000 கோடி ரூபாய் முதலீட்டில், தேசிய வள நிதியம் (எஸ். டபிள்யூ.எப்) ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாக பரிசீலித்து வருவதாக கூறப்படுகிறது.உரத்துறையின் மேம்பாட்டிற் காக, பொதுத் துறை மற்றும் தனியார் துறையினர் பங்கேற்கும் வகையில், 1 லட்சம் கோடி ரூபாய் முதலீட்டில், தேசியமுதலீட்டு நிதியம் ஏற்படுத்த வேண்டும்.

பங்கு முதலீடு:இந்த தொகை மூலம் உரத் தயாரிப்பிற்கு தேவையான பொட்டாஷ் மற்றும்

பாஸ்பேட் ஆகிவற்றின் உற்பத்தியில் ஈடுபட்டு வரும் அன்னிய கனிம நிறுவனங்களில் பங்கு முதலீடு செய்வது, கனிம சுரங்கங்களை கையகப் படுத்துவது உள்ளிட்ட வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.இதன் மூலம், உரங்களுக்கான மூலப் பொருட் களின் இறக்குமதி செலவு குறைந்து,உள்நாட்டில் உரம் விலைகட்டுக்குள் வரும். நீண்ட கால பயனைக் கருத்தில் கொண்டு இத்தகைய நடவடிக்கையைமத்திய அரசு எடுக்க வேண்டும்.

இது போன்ற நடைமுறையை அண்டை நாடான சீனா கடைபிடித்து வருகிறது. இதனால்அந்நாடு சிறந்த பயனைக் கண் டுள்ளது. இந்தியாவும், இந்த நடைமுறையை பின்பற்ற வேண்டும். இல்லையென்றால் உரங்களுக்கான மானியச் செலவு, 1 லட்சம் கோடியாக உயரும். இதை தவிர்க்க, மூலப்பொருட்களுக்கான கனிம வளங்களை பெறும் வகையில் கையகப் படுத்துவதே சிறந்த வழியாகும்.

ஆப்பிரிக்காஇந்த தேசிய முதலீட்டுநிதியம், பொதுத்துறை மட்டுமின்றி, பொதுத்துறையும், தனியார் துறையும் இணைந்து செயல்படும் திட்டங்களுக்கும் ஆதரவளிக்க வேண்டும். தற்போது, ஆப்பிரிக்கா, கனடா மற்றும் தென்அமெரிக்கா உள் ளிட்ட மூன்று, நான்கு நாடுகளில் உள்ள ஏராளமான கனிம சுரங்க நிறுவனங்களை கையகப் படுத்துவதற்கான வாய்ப் புகள் உள்ளன. இந்த நிறுவனங்களில், குறிப்பிடத்தக்க அளவிற்கு பங்கு மூலதனம் மேற்கொள்ளும்பட்சத்தில், குறைந்த விலையில் பொட்டாஷ் மற்றும் பாஸ்பேட் ஆகிய கனிம மூலப் பொருட்களை இறக்குமதி செய்து கொள்ள முடியும். மத்திய அர", இது குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு வெள்ளையன் தெரிவித்தார்.

இந்தியாவில், பாஸ்போரிக் மற்றும் பொட்டாஷிம் அடிப்படையில் உரங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள்,90 சத வீத மூலப்பொருட்களை இறக்குமதி செய்து வருகின்றன.

உள்நாட்டில்10சதவீத அளவிற்கே மூலப்பொருள்கள் கிடைக் கின்றன.மூலப்பொருட்கள் தடையின்றி கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், இந்தியாவை சேர்ந்த பல நிறுவனங்கள் மொராக்கோ, துனிஷியா,ஜோர்டான் மற்றும் தென் அமெரிக்க ஆகிய நாடுகளைச் சேர்ந்த பல கனிம நிறுவனங்களுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன.

பயன்பாடு:சென்ற 2010-11ம் நிதியாண்டில், நம் நாட்டில் 5.80 கோடி டன் உரங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இதில் 2.20 கோடி டன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.எஞ்சிய 3.60 கோடி டன் உர உற்பத்திக்காக,1.60 கோடி டன் மூலப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.இந்தியா தற்போது,100 சதவீத அளவிற்குபொட்டாஷ்,90சதவீத அளவிற்கு டை அமோனியம் பாஸ்பேட்டை இறக்குமதி செய்து வருகிறது. சென்ற நிதியாண்டில், 74 லட்சம் டன் டை அமோனியம் பாஸ்பேட் மற்றும் 45 லட்சம் டன் பொட்டாஷ் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. மூலப்பொருட்களின் விலை உயர்வால், டை அமோனியம் பாஸ்பேட் விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டு 2010ம் ஆண்டு ஒரு டன் டை அமோனியம் பாஸ்பேட் விலை 9,350 ரூபாயாக இருந்தது. இது, தற்போது 18, 500 ரூபாயாக உயர்ந்துள்ளது.

**தேயிலை சுற்றுலா விழா**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 09,2011,00:39 IST

கருத்தை பதிவு செய்ய

ஊட்டி : "தேயிலை சுற்றுலா விழா வரும் 28 மற்றும் 29ம் தேதிகளில் நடத்தப்படும்,' என எதிர்பார்க்கப்படுகிறது. நீலகிரிக்கு வரும் சுற்றுலா பயணிகளை கவர இரண்டாம் சீசனான செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் வரும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில்,தேயிலை மற்றும் சுற்றுலா விழா மட்டும் நடத்தப்படுகிறது. இந்தாண்டு அக்டோபர் மாதம் உள்ளாட்சி தேர்தல் நடந்ததால் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருந்ததால் தேதி குறிப்பிடாமல் தேயிலை மற்றும் சுற்றுலா விழா ஒத்தி வைக்கப்பட்டது. இம்மாதம் 28 மற்றும் 29ம் தேதிகளில் தேயிலை மற்றும் சுற்றுலா விழா நடத்த முடிவு செய்யப்பட்டு சுற்றுலா துறைக்கு தகவல் தெரிவித்துள்ளது. விரைவில் இதற்கான பணிகள் துவங்க உள்ளது.

**மானிய விலையில் வேளாண் கருவிகள் பயனடைய விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 09,2011,01:46 IST

திருச்சி: "தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் கீழ், வேளாண் பொறியியல் துறை சார்பில் வழங்கப்படும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை மானியத்தில் பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்' என கலெக்டர் ஜெயஸ்ரீ அழைப்பு விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: திருச்சி மாவட்டத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டதின் கீழ் பல்வேறு வகையான புதிய, நவீன மற்றும் விலையுயர்ந்த வேளாண் இயந்திரங்கள், கருவிகள், 2011-12ம் நிதியாண்டுக்கு மொத்தம் 198 பொருட்கள், 127.60 லட்ச ரூபாய் மானியத்தில் வேளாண் பொறியியல்துறை மூலம் வழங்கப்படவுள்ளது. அதிகபட்ச மானியமாக, பற்பயிர் கதிரடிக்கும் இயந்திரம் ஒன்றுக்கு 1.5 லட்ச ரூபாய், மக்காளச்சோளம் பிரித்தெடுக்கும் கருவிக்கு 80 ஆயிரம் ரூபாய், இருகர களை எடுக்கும் இயந்திரம் 50 ஆயிரம் ரூபாய், நான்கு கர களை எடுக்கும் இயந்திரம் 1.25 லட்ச ரூபாய், இயந்திர தெளிப்பான் 20 ஆயிரம் ரூபாய், இரண்டு ஹெக்டேர் நடவு திறனுக்குள் உள்ள நெல் நடவு இயந்திரம் 1.25 லட்ச ரூபாய், நடவு திறன் இரண்டு ஹெக்டேருக்கு மேல் உள்ள நெல் நடவு இயந்திரத்துக்கு நான்கு லட்ச ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. மனித தியால் இயங்கக்கூடிய கருவிகளாகிய மானாவாரி களை எடுக்கும் கருவி, தென்னை மரம் ஏற உதவும் கருவி, தெளிப்பான் போன்ற கருவிகள் அதிகபட்ச மானியமாக 5,000 ரூபாய், நெல் நாற்றங்கால் தயாரிக்கும் தட்டுகள் 10 ஆயிரம் ரூபாய், பவர் டில்லர் 45

ஆயிரம் ரூபாய், ரோட்டவேட்டர் 20 ஆயிரம் ரூபாய் மற்றும் தானியங்கி ரம்பம், தீவணம், மரக்கிளை வெட்டும் கருவி, நகரும் நீர்ப்பாசனக்கருவி போன்ற சிறப்பு தோட்டக்கலை கருவிகள் 25 ஆயிரம் ரூபாய்க்கும் வழங்கப்படுகிறது. அதிகபட்ச நெல் அறுவடை இயந்திரத்துக்கு நான்கு லட்ச ரூபாய் வழங்கப்படுகிறது. எனவே, வேளாண் பெருமக்கள் மேற்கண்ட இயந்திரங்களை மானியத்தில் பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறது. வேளாண் பொறியியல் துறையின் மூலம் வழங்கப்படும் வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகள் பெற, ஸ்ரீரங்கம் மற்றும் மணப்பாறை வட்டார விவசாயிகள், திருச்சி ஜெயில் கார்னர், கொட்டப்பட்டு என்ற முகவரியில் உள்ள உதவி செயற்பொறியாளரையும் (வேளாண் பொறியியல்), தொட்டியம், முசிறி மற்றும் துறையூர் வட்டார விவசாயிகள், 1/17, 7வது குறுக்குத்தெரு, பார்வதிபுரம், முசிறி என்ற முகவரியில் உதவி செயற்பொறியாளரையும், லால்குடி மற்றும் மண்ணச்சநல்லூர் வட்டார விவசாயிகள், 8, 5வது குறுக்குத்தெரு, பரமசிவபுரம், லால்குடி என்ற முகவரியில் உள்ள உதவி செயற்பொறியாளரையும் அணுகி, விண்ணப்பித்து பயனடையலாம்.

**பயிர்க்காப்பீடுத் தொகை வழங்கப்படுமா? புதுகை மாவட்ட விவசாயிகள் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 09,2011,01:56 IST

கருத்தை பதிவு செய்ய

புதுக்கோட்டை: "புதுக்கோட்டை மாவட்டத்தில் பயிர் காப்பீடு திட்டத்தில் இணைந்து பிரிமியம் செலுத்திய விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்' என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். பலத்த மழை, வறட்சி, நோய் தாக்குதல் போன்ற பல்வேறு காரணங்களால் சாகுபடி செய்யப்படும் பயிர்கள் சேதமடைவதன் மூலம் விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்யும் விதமாக பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சிறு மற்றும் குறு விவசாயிகள் ஏக்கருக்கு 75 ரூபாய் வீதமும், இதர விவசாயிகள் ஏக்கருக்கு 83 ரூபாய் வீதமும் பிரிமியம் செலுத்தவேண்டும். அறுவடை தருவாயில் வோளாண், வருவாய்த்துறை மற்றும் காப்பீடு நிறுவன அதிகாரிகள் விளைநிலங்களுக்கு நேரில்சென்று ஆய்வு செய்து மகசூல் பாதிப்பு குறித்து கணக்கெடுப்பு நடத்தி அறிக்கை தாக்கல் செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை வழங்குவது வழக்கம். புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்தாண்டு பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் டெல்டா பகுதி விவசாயிகள் உட்பட 60 ஆயிரம் பேர் பிரிமியம் செலுத்தியுள்ளனர். அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் கடந்தாண்டு சம்பா பருவத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்கள் புகையான் நோய் தாக்குதலுக்கு உள்ளானதால் மகசூல் அடியோடு குறைந்து அப்பகுதி விவசாயிகள் பலத்த பாதிப்புக்கு உள்ளாயினர். இலுப்பூர்,

அன்னவாசல், குடுமியான்மலை, ஆதனக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்கள் போதிய தண்ணீரின்றி வாடியதால் மகசூல் பாதிக்கப்பட்டது. இவ்வாறு வறட்சி, நோய் தாக்குதல் போன்ற பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்ட நெற் பயிர்களை அதிகாரிகள் நேரில் சென்று ஆய்வு செய்து காப்பீட்டு நிறுவனத்திடம் அறிக்கை அளித்துள்ளனர். ஓராண்டு கடந்தும் இதுவரை அம்மாவட்ட விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் தொகை வழங்கப்படவில்லை. இந்தாண்டு பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு இம்மாதம் 15ம் தேதிவரை காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த தகவல் டெல்டா பகுதி விவசாயிகளுக்கு தெரியவில்லை. இதன்காரணமாக அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, கறம்பக்குடி பஞ்சாயத்து யூனியன் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயன்பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு கடந்த ஆண்டு பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பிரிமியம் செலுத்திய விவசாயிகளுக்கு உடனடியாக காப்பீட்டுத் தொகை வழங்கவும், இந்தாண்டு பயிர் காப்பீடு செய்ய நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவை நீட்டிக்கவும் கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் விரும்புகின்றனர். டெல்டா பகுதி விவசாயி ராமசாமி கூறியதாவது: புதுக்கோட்டை மாவட்ட டெல்டா பகுதிகளான அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் கடந்த ஆண்டு சம்பா பருவத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெற் பயிர்கள் புகையான் நோய் தாக்குதலால் சேதமடைந்தது. இதன்காரணமாக விவசாயிகளுக்கு பலத்த மகசூல் இழப்பு ஏற்பட்டது. நோய் தாக்குதல் குறித்து அதிகாரிகள் நேரில் வந்து ஆய்வு செய்தும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுநாள் வரை காப்பீட்டுத் தொகை வழங்கப்படவில்லை. ஏமாற்றமடைந்துள்ள டெல்டா பகுதி விவசாயிகள் இந்த ஆண்டு பயிர் காப்பீட்டு திட்டத்தில் இணைய ஆர்வம் காட்டவில்லை. இதற்கிடையே இந்தாண்டு பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பிரிமியம் செலுத்த இம்மாதம் 15ம் தேதி கடைசி நாள் என கெடு விதிக்கப்பட்டுள்ளது. இந்த தகவல் டெல்டா பகுதி விவசாயிகளுக்கு தெரியாது. இன்று (6ம் தேதி) தற்செயலாக அறந்தாங்கி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியை தொடர்புகொண்டபோது தெரியவந்தது. அதிகாரிகளின் இதுபோன்ற அலட்சியப் போக்குகளால் விவசாயிகளுக்காக மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்திவரும் திட்டங்கள் அவர்களை சென்றடையாத நிலை உள்ளது. இவ்வாறு அவர் ஆதங்கம் தெரிவித்தார்.

**விவசாய கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 09,2011,03:47 IST

கோவில்பட்டி : கழுகாசலபுரம் கிராமத்தில் வேளாண்மை துறை சார்பில் விவசாய கருத்தரங்கு நடந்தது. கோவில்பட்டி அருகே கழுகாசலபுரம் கிராமத்தில் இன்டோபில் இன்டஸ்ட்ரீஸ்

லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் விவசாய கருத்தரங்கு நடந்தது. கழுகாசலபுரம் கிராம சமுதாய நலக்கூடத்தில் நடந்த கூட்டத்திற்கு விளாத்திகுளம் வேளா ண்மை அலுவலர் மோகன் தலைமை வகித்தார். நிறுவனத்தின் விற்பனை அதிகாரி மாரிமுத்துவேல் வரவேற்றார். தொடர்ந்து உதவி வேளாண்மை இயக்குநர் கருப்பசாமி, இன்டோபில் மண்டல சந்தைப்பிரிவு உதவி மேலாளர் மணி ஆகியோர் கலந்து கொண்டு பூச்சிக் கொல்லிகளை பாதுகாப்பாக கையாள்வது குறித்தும், விவசாயத்தில் இன்டோபிலின் பங்கு குறித்தும் பேசினார். நிறுவன டெக்னிக்கல் அலுவலர் சங்கரராமசுப்பிரமணியம் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 09,2011,03:41 IST

கருத்தை பதிவு செய்ய

தூத்துக்குடி : செய்துங்கநல்லூரில் வேளாண் வணிகத்துறை சார்பில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி நடந்தது. தூத்துக்குடி வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பாக அட்மா திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கான தொழில்நுட்ப பயிற்சி நடந்தது. பயிற்சியை கருங்குளம் யூனியன் சேர்மன் பிச்சையா துவக்கி வைத்தார். வேளாண் வணிக வேளாண்மை அலுவலர் ராஜா வரவேற்றார். மாவட்ட வேளாண் வணிக வேளாண்மை துணை இயக்குநர் முருகவேல் விளைபொருட்களை சந்தைப்படுத்தும் முறைகள், அதன் பயன்கள் பற்றியும், தோட்டக்கலை உதவி இயக்குநர் அல்பர்ட் விளைபொருட்களை மதிப்பு கூட்டி விற்பதினால் ஏற்படும் பயன்கள் பற்றியும் பேசினர். வேளாண்மை உதவி இயக்குநர் கிருஷ்ணபிள்ளை அறுவடை பின்செய் நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் வேளாண்மை துறையின் திட்டங்கள் பற்றி பேசினார். வேளாண் வணிக வேளாண்மை அலுவலர் மணிகண்டன் விளைபொருள்களை காலம்தாழ்த்தி விற்பனை செய்தல், சந்தை நிலவரங்களை எவ்வாறு அறியலாம் என்பதை பற்றியும், வேளாண்மை அலுவலர்கள் அஜ்மல்கான், சங்கர், ராஜா ஆகியோர் தொழில்நுட்பம் பற்றியும் பேசினர். செய்துங்கநல்லூர் விளைபொருள் உற்பத்தியாளர் குழுத் தலைவர் குமார், மணக்கரை குழுத் தலைவர் சுந்தரவிநாயகம், ஆழ்வார்கற்குளம் குழுத் தலைவர் மலையாண்டி, கருங்குளம் வட்டார அட்மா குழு தலைவர் ராஜபாண்டி ஆகியோர் தங்களது வேளாண் தொழில்நுட்ப அனுபவங்களை தெரிவித்தனர்.

**மத்திய அரசு அனுமதி கிடைத்தால் மட்டுமே முல்லைப்பெரியாறில் புதிய அணை கட்ட முடியும் கேரள மந்திரி பி.ஜே.ஜோசப் பேட்டி**

முல்லைப்பெரியாறு, டிச.9–

“முல்லைப் பெரியாறில் கேரள அரசு புதிய அணை கட்ட தயாராக இருந்தபோதிலும், மத்திய அரசின் அனுமதி கிடைத்தால் மட்டுமே கட்ட முடியும்“ என்று கேரள நீர்ப்பாசனத் துறை மந்திரி பி.ஜே. ஜோசப் கூறினார்.

நேரில் பார்வையிட்டார்

முல்லைப்பெரியாறு அணை பிரச்சினையை யொட்டி இரு மாநில எல்லையில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது. இந்த நிலையில் கேரள நீர்ப்பாசனத்துறை மந்திரி பி.ஜே.ஜோசப் நேற்று முல்லைப் பெரியாறு அணையை திடீரென பார்வையிட சென்றார்.

அவருடன் அரசு அதிகாரிகள் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் அடங்கிய குழுவினரும் சென்றனர். திருவனந்தபுரத்தில் இருந்து பத்திரிகையாளர்களும் அழைத்து செல்லப்பட்டு இருந்தனர்.

அணையை பார்வையிட்ட பின்னர் மந்திரி பி.ஜே.ஜோசப் நிருபர்களிடம் கூறியதாவது:–

அரசின் நோக்கம்

முல்லைப் பெரியாறு அணை 1895–ம் ஆண்டு கட்டப்பட்டது. இந்த அணையின் ஆயுள் காலம் 50 ஆண்டுகள் மட்டுமே.

இந்த நிலையில், 116 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த அணையின் பாதுகாப்பை கருதி, இந்த அணையில் இருந்து 1300 அடி தூரத்தில் புதிய அணை கட்டுவதற்கான தொடக்க கட்ட நடவடிக்கைகளில் கேரள அரசு தயாராகி வந்தபோதிலும், மத்திய அரசின் அனுமதி கிடைத்தால் மட்டுமே புதிய அணை கட்ட முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

“தமிழகத்துக்கு தண்ணீர்“, “கேரள மக்களுக்கு பாதுகாப்பு“ என்பதே கேரள அரசின் முக்கிய நோக்கம் ஆகும்.

தமிழகத்தின் உரிமை

புதிய அணை கட்டுவதன் மூலம் தமிழகத்தின் உரிமை பாதிக்கப்படும் என்று கூறுவதில் அர்த்தமில்லை. இப்போது வழங்கப்படும் அதே அளவு தண்ணீர் புதிய அணை கட்டிய பின்னரும் தமிழ்நாட்டுக்கு தங்கு தடையின்றி வழங்கப்படும்.

முல்லைப் பெரியாறு நீர்ப்பிடிப்பு பகுதிகளில் அடிக்கடி பெய்துவரும் கன மழை மற்றும் தொடர் நில நடுக்கங்கங்கள் காரணமாக கேரள மக்கள் அச்சத்தில் மூழ்கியுள்ளனர். கேரள மக்களின் அச்சத்தை போக்க வேண்டியது அரசின் கடமை ஆகும். இதற்கு ஒரே வழி முல்லைப்பெரியாறில் புதிய அணை கட்டுவதுதான்.

5 மாவட்டங்கள்

தற்போது முல்லைப் பெரியாறு அணை மூலம் பெறப்படும் தண்ணீர் மூலம் தமிழ் நாட்டில் தேனி உள்பட 5 மாவட்டங்கள் சொர்க்க பூமியாக விளங்கி வருகிறது. நில நடுக்கம் போன்ற இயற்கைச் சீற்றங்களால் அணை உடையும் பட்சத்தில் அந்த 5 மாவட்டங்களும் வறண்ட பூமியாக மாறும் நிலை வரும்.

கடந்த 6 மாதங்களில் 22 தடவை முல்லைப் பெரியாறில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. அதிக பட்சமாக ரிக்டர் அளவு கோலில் 3.5 என பதிவாகியுள்ள நிலையில் ரிக்டர் அளவில் 6 என

ஏற்படும் பட்சத்தில் அணை உடையும் என்று நிபுணர்கள் கூறி வருகிறார்கள்.
தமிழகம் ஒத்துழைக்க வேண்டும்
இந்த நிலையில், 999 ஆண்டு கால ஒப்பந்தத்தை கருத்தில் கொள்ளாமல் புதிய அணை கட்ட தமிழக அரசு கேரள அரசுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். இந்த விஷயத்தில் மத்திய அரசு உடனடியாக தலையிட்டு புதிய அணையை கட்டுவதற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதுடன் அணை பாதுகாப்பு சட்ட மசோதாவை இந்த ஆண்டிலேயே பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும்.
இவ்வாறு மந்திரி பி.ஜே.ஜோசப் கூறினார்.
மந்திரியுடன், முல்லைப் பெரியாறு ஆய்வுக்குழு உறுப்பினர்கள் தோமஸ் சாண்டி எம்.எல்.ஏ., டி.என். பிரதாபன் எம்.எல்.ஏ., வர்க்கலை ககார் எம்.எல்.ஏ. மற்றும் ஜி.எஸ்.ஆரிப், கே.முகமது உண்ணி ஆகியோர் உடன் வந்தனர்.

**நவம்பர் 26–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 6.60 சதவீதமாக குறைந்தது**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
காய்கறிகள், வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் கோதுமை விலை குறைந்ததையடுத்து, நவம்பர் 26–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் கடந்த 39 மாதங்களில் இல்லாத அளவிற்கு 6.60 சதவீதமாக குறைந்துள்ளது. மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் இந்த பணவீக்கம் முந்தைய வாரத்தில் 8 சதவீதமாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது இப்பணவீக்கம் 1.40 சதவீதம் குறைந்துள்ளது.
வெங்காயம்
கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓராண்டு கால அடிப்படையில் வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு விலை முறையே 39.20 சதவீதம் மற்றும் 15.75 சதவீதம் குறைந்துள்ளது. இதனையடுத்து, காய்கறி விலை 1.25 சதவீதம் குறைந்துள்ளது. கடந்த செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் காய்கறி விலை ஓர் ஆண்டு கால அடிப்படையில் 10 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்து இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. கோதுமை விலை ஓராண்டு கால அடிப்படையில் 4.70 சதவீதம் குறைந்துள்ளது.
மேற்கண்டவற்றின் விலை குறைந்துள்ள நிலையிலும் பருப்பு வகைகள் மற்றும் பால் விலை முறையே 13 சதவீதம், 11.02 சதவீதம் அதிகரித்துள்ளது. முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 10.04 சதவீதம் அதிகரித்துள்ளது. பழங்கள் மற்றும் தானியங்கள் விலை முறையே 10.72 சதவீதம் மற்றும் 1.68 சதவீதம் உயர்ந்துள்ளது.
எண்ணெய் வித்துக்கள், கனிமங்கள் உள்ளிட்ட உணவு சாரா பொருள்கள் பணவீக்கம் நவம்பர் 19–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 2.14 சதவீதமாக இருந்தது. இது, தற்போது 1.37

சதவீதமாக குறைந்துள்ளது. சென்ற சில மாதங்களாக 8 சதவீதமாக இருந்த இந்த பணவீக்கம் படிப்படியாக குறைந்து தற்போது 2 சதவீதத்திற்கும் கீழாக சரிவடைந்துள்ளது. எரிபொருள் மற்றும் எரிசக்தி பணவீக்கம் முந்தைய வாரத்தைப் போன்று தற்போது 15.53 சதவீதமாக உள்ளது.

பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 20 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள முதன்மை பொருள் பணவீக்கம் 7.74 சதவீதத்திலிருந்து 6.92 சதவீதமாக குறைந்துள்ளது.

2010 டிசம்பர் மாதத்திலிருந்து பொது பணவீக்கம் 9 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்து வருகிறது. 2011 அக்டோபரில் இது 9.73 சதவீதமாக இருந்தது.

பாரத ரிசர்வ் வங்கி

பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் பாரத ரிசர்வ் வங்கி பல முறை வட்டி விகிதங்களை உயர்த்தியதையடுத்து, நடப்பு நிதி ஆண்டின் இரண்டாவது காலாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த ஒன்பது காலாண்டுகளில் இல்லாத அளவிற்கு 6.9 சதவீதமாக குறைந்துள்ளது. இந்நிலையில், தற்போது உணவு பணவீக்கம் குறைந்துள்ளது மத்திய அரசுக்கும், பாரத ரிசர்வ் வங்கிக்கும் சற்று ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளது

**அக்டோபர் வரையிலான ஏழு மாதங்களில் இயற்கை ரப்பர் இறக்குமதி 95,919 டன்னாக சரிந்தது**



பி கே கிருஷ்ணகுமார்

கொச்சி

அக்டோபர் வரையிலான ஏழு மாதங்களில் இயற்கை ரப்பர் இறக்குமதி 95,919 டன்னாக குறைந்துள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் 1,38,245 டன்னாக இருந்தது.

டயர் நிறுவனங்கள்

சர்வதேச சந்தையில் விலை அதிகரித்து காணப்பட்டதால் டயர் தயாரிப்பு நிறுவனங்கள் ரப்பர் இறக்குமதியில் அதிக ஆர்வம் காட்டவில்லை. சர்வதேச சந்தையில் விலை குறைந்து சாதகமான சூழ்நிலை ஏற்பட்ட போது டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் வெளி மதிப்பு அதிகம் சரிவடைந்து இறக்குமதிக்கு பாதிப்பு ஏற்பட்டது.

அக்டோபர் மாதம் வரையிலான ஏழு மாதங்களில் ரப்பர் ஏற்றுமதி 300 சதவீத அதிகரிப்புடன் 19,995 டன்னாக இருந்தது. ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலான காலத்தில் பயன்பாடு 0.20 சதவீதம் குறைந்து 5,51,425 டன்னாக உள்ளது.

4.81 லட்சம் டன்

அக்டோபர் வரையிலான ஏழு மாதங்களில் ரப்பர் உற்பத்தி 5 சதவீதம் உயர்ந்து 4.81 லட்சம் டன்னாக உயர்ந்தது. எதிர்மறையாக, உற்பத்தி பருவம் உச்ச நிலையில் இருக்கும் போது வாகன தயாரிப்பு நிறுவனங்களின் ரப்பர் தேவை குறைந்து காணப்பட்டது. எனவே, சரியான விலை கிடைக்காததால், உற்பத்தியாளர்கள் விற்பனையில் தயக்கம் காட்டி வந்தனர். தற்போது வாகன தயாரிப்பு நிறுவனங்களின் தேவை அதிகரித்து வருவதால் ரப்பர் விலை நிலவரம் சீரடைந்து வருகிறது.

***உணவு பணவீக்கம் குறைந்த நிலையிலும் 'சென்செக்ஸ்' 389 புள்ளிகள் வீழ்ச்சி***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*மும்பை*
*உணவு பணவீக்கம் குறைந்துள்ள நிலையிலும், வியாழக்கிழமை அன்று நாட்டின் பங்கு வர்த்தகத்தில் வீழ்ச்சி ஏற்பட்டது. மும்பை பங்குச் சந்தையின் குறியீட்டு எண் 'சென்செக்ஸ்' 389 புள்ளிகளை இழந்தது.*
*உணவு பணவீக்கம்*
*நவம்பர் 26–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் கடந்த 39 மாதங்களில் இல்லாத அளவிற்கு 6.60 சதவீதமாக குறைந்துள்ளது. இது, பங்கு வியாபாரத்தில் எவ்வித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.*
*செப்டம்பர் மாதத்தில், நாட்டின் தொழில்துறை உற்பத்தியில் 1.9 சதவீதம் மட்டுமே வளர்ச்சி ஏற்பட்டு இருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு வளர்ச்சி வேகம் குறைந்துள்ளது.*
*இந்நிலையில், நாட்டின் தொழில்துறை உற்பத்தியை கணக்கிடுவதில் 38 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள எட்டு முக்கியத் துறைகளின் உற்பத்தியில், அக்டோபர் மாதத்தில் 0.1 சதவீதம் மட்டுமே வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, அக்டோபர் மாதத்தில் தொழில்துறை உற்பத்தியில் வளர்ச்சி ஏற்படுவதற்கு பதிலாக 7 சதவீத சரிவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்த அதிகாரபூர்வமான அறிவிப்பு அடுத்த வாரத்தில் வெளியிடப்படும். ஆக, உள்நாட்டு நிலவரங்கள் பங்கு வர்த்தகத்திற்கு சாதகமாக இல்லை.*
*இந்நிலையில், இன்று நடைபெறும் ஐரோப்பிய நாடுகளின் உச்சி மாநாட்டில், கிரீஸ் உள்ளிட்ட கடன் நெருக்கடியில் சிக்கி தவிக்கும் சில ஐரோப்பிய நாடுகளின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமா என்ற ஐயப்பாடு நிலவியது. இதனையடுத்து, ஐரோப்பா மற்றும் இதர ஆசிய நாடுகளில் பங்கு வர்த்தகம் மந்தமாக இருந்தது. இதன் தாக்கம் இந்திய பங்குச் சந்தைகளிலும் எதிரொலித்தது.*
*வியாழக்கிழமை அன்று பல துறைகளைச் சேர்ந்த, குறிப்பாக பொறியியல், ரியல் எஸ்டேட், உலோகம், மோட்டார் வாகனம் ஆகிய துறைகளை சேர்ந்த நிறுவனப் பங்குகள் பலத்த அடி வாங்கின.*
*சென்செக்ஸ்*
*வர்த்தகம் முடியும்போது 'சென்செக்ஸ்' 388.82 புள்ளிகள் வீழ்ச்சி கண்டு 16,488.24 புள்ளிகளில் நிலை கொண்டது. வர்த்தகத்தின் இடையே, அதிகபட்சமாக 16,847.82 புள்ளிகள் வரையிலும், குறைந்தபட்சமாக 16,421.55 புள்ளிகள் வரையிலும் சென்றது.*
*தேசிய பங்குச் சந்தையின் குறியீட்டு எண் 'நிஃப்டி' 118.95 புள்ளிகள் சரிவடைந்து 4,943.65 புள்ளிகளில் நிலைபெற்றது.*